

# பூட்டிய கதவு

*மா விஜயராகவன், பாளையம்கோட்டை*

*திருநெல்வேலி-627002*

*தமிழ் நாடு*

வலதுபக்கம் மட்டும் கொஞ்சம் இடம், இடதுபக்கம் பந்து போனால் கண்டு பிடிக்க அரைமணி நேரம் ஆகும் அளவிற்கு அடர்த்தியான முள்ளுக்காடு, எதிரில் வீடுகள், நடுவிலே நட்டு வைத்திருந்த மூன்று குச்சிகள் , அதற்குப் பின்னால் பந்து போகாமல் தடுத்து நிறுத்துவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டப்பட்டிருந்த சைக்கிள், இதில் அவ்வப்போது விளையாட்டைக் கெடுக்க, நடுவிலே வந்துபோகும் இருசக்கரவாகனங்கள் . இதுதான் இவங்களுடைய லார்ட்ஸ் மைதானத்தின் வரைபடம். ஒரே பாயில் படுத்துத் தூங்கும் குழந்தைகள் போல, அவர்களுக்கு அருகிலேயே குச்சி நட்டு விளையாடுகிறது மற்றொரு அணி. ஒரு அணிக்கு இத்தனை பேர் தான் என்ற வரைமுறையோ, இப்படித் தான் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்ற விதி முறையோ அங்கு கிடையாது.. கூடும் ஆட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சூரியனின் மேற்பார்வையில் , உடைமரத்து நிழலில் மட்டையும்

பந்தும் ஒன்றோடொன்று மோதும். அந்த மோதலில் கிளம்பும் புழுதியில் வீதியின் முகமே மறைந்து போகும்...

“போனவாட்டி நீ தான முதல்ல இறங்குன....இந்தவாட்டி நான் தான் பர்ஸ்ட் பாட்டிங்..”

“அதலாம் கிடையாது! ஜெயிச்சவன் தான் பர்ஸ்ட் பாட்டிங்......” என எப்போதும் அந்த மைதானத்தில் கேட்கும் குரல்கள் காற்றோடு காற்றாய் சஞ்சரித்துக் கொண்டு இருந்தது... அங்கே கேட்கும் குரலுக்கு சொந்தமான உருவங்களில் சிலவை சீப்பு தீண்டாத தலையுடனும் , சிலவை செருப்பு அணியாத கால்களுடனும், சிலவை சட்டை அணியாத மேல் உடம்போடும் , சிலவை பட்டன் இல்லாத சட்டை அணிந்தபடியும் வெவ்வேறு உயரத்தில் காணப்படும்.. ஆனால் எல்லார் முகத்திலும் பொதுவாக ஒருவித மகிழ்ச்சி மட்டும் நிறைந்திருந்தது. ஒருவேளை அவர்களுக்குப் பொது சொத்தாய் அமைந்திருக்கும் இந்த பெரிய மைதானம் கூட அதற்கு காரணமாய் இருக்கலாம்..

அந்த மைதானத்தையும் அதில் விளையாடும் சிறுவர்களையும் எதிரே இருந்த பெரிய வீடு ஒன்று ஆணவத்தோடு பார்த்தபடி இருந்தது....தனக்கும் இந்த மைதானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லும்படியான பல அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட பெரிய இரும்பு வாசல் கதவும் , எட்டிப் பார்க்க முடியாத அளவு பெரிய மதில் சுவரும், வீட்டு முகப்பில் நான்கு சக்கர வாகனுமும் கொண்ட இரண்டடுக்கு ஆடம்பர வீடு அது..

அந்த வீட்டு சிறுவன் ராகுலும், மைதானத்தில் விளையாடும் சிறுவர்களும் ஒரே வயது வரம்பு தான்..ஆனால் படிக்கும் பள்ளியும்

வாழும் சூழலும் மட்டும் வேறு வேறு என்பதை அவன் அணிந்திருக்கும் ஆடையும் அவனது வீடும் சொல்லாமல் சொல்லிவிடும்..

யானையின் மணி சப்தத்திற்குப் பிறகு ராகுல் விரும்புவது, மைதானத்தில் பந்தும் மட்டையும் மோதும் சத்தத்தைத் தான். மைதானத்தில் சைக்கிள் பெல் அடித்தபடி சிறுவர்கள் ஒன்று சேரும் சப்தம் கேட்டதும் ராகுல் தயாராகி விடுவான்.. வகிடு எடுத்து சீவப்பட்ட தலையில் ஸ்டைலாகத் தொப்பியும் , விளையாடும் போது கல்லோ முள்ளோ காலில் குத்தாமல் இருக்க வெள்ளை நிறத்தில் ஷு ஒன்றும் , கழுத்தில் தொடங்கி மொத்த கையையும் மறைக்கும் நீளமான முழு கை டி-ஷர்ட் என தான் விரும்பிய அனைத்தையும் அணிந்து கொண்டு கிளம்பி விடுவான்..ஆனால் இத்தனையும் அணிந்துகொண்டு அவன் ஆசையாய் போவது , வீட்டு வாசல் கதவு வரை மட்டுமே.....

உள்ளே பூட்டியிருக்கும் வீட்டு வாசல் கதவு அவனுக்கும் அவனது கனவு மைதானத்திற்கும் இடையே பெரிய தடுப்புச் சுவராய் நிமிர்ந்து நின்றது..வாசல் தாழ்ப்பாளைத் திறக்கும் அளவுக்குக் கூட வளராத அவன்,கதவைத் திறக்க எத்தனை முயற்சித்தும் பலனில்லை...இந்த முறை, எப்படியாவது கதவைத் திறந்து வெளியே விளையாட போய் விட வேண்டும் என்ற ஆசையில் தாழ்ப்பாள் உயரத்திற்கு குதித்த அவன் கால்கள் , எப்போதும் போல் தோல்வியை தழுவியபடியே தரை இறங்கின.. வீட்டின் பூட்டிய கதவு இன்றும் அவனை வெளியே அனுமதிக்காமல் வெற்றிச் சிரிப்புச் சிரித்தது.....

கண்ணுக்கு எதிரே இருந்தும், எட்டாக்கனியாய் இருக்கும் மைதானமும் அதில் எப்போழுதும் குழுமி இருக்கும் சிறுவர்களும் ராகுலுக்காக ஒதுக்கப்பட்ட தனிமை உலகில் அனுமதிக்கப்படவில்லை

போலும்.. கடலில் பயணிக்க ஆசை இருந்தும் இன்னும் கரையிலேயே கட்டப்பட்டுக் கிடக்கும் படகைப் போல், இவனும் தன் வீட்டுச் சிறையில் அடைப்பட்டு இருக்கிறான்...ஓட தயாராய் இருக்கும் ஷு கால்களுடன் பூட்டிய கதவின் கம்பியைப் பிடித்தபடியே,கதவின் அழகிய துவாரங்கள் வழியாக மைதானத்தை வேடிக்கை பார்த்தபடி இவனது கண்கள் ஏக்கத்தோடு காத்திருக்கின்றன.....அந்த சிறிய துவாரத்தின் வழியே வேடிக்கைப் பார்க்கையில் பெரிய மைதானம் கூட
அவனுக்கு சின்னதாய்த் தான் தெரிந்தது..

விளையாடும் ஆசையோடு அவன் வாங்கிய மட்டையும், பந்தும் அவனைப் போலவே கதவோரமாய் ஏக்கத்தோடு காத்திருக்க ,இவன் வாய் லேசாக சப்தம் எழுப்பியது ,"அம்மா! நானும் அவங்களோட விளையாடப் போகணும்...". அவனது ஆள்காட்டி விரல் இப்போது கதவு துவாரம் வழியாக மைதானத்தைக் காட்டியபடி இருந்தது..அவன் கண்களில் முட்டியிருக்கும் கண்ணீரும், வடியவா? வேண்டாமா? என்று அவன் அம்மாவின் பதிலுக்காக காத்திருந்தது..

சேலையின் மடிப்பைச் சரி செய்தபடியே, தோளில் தொங்கும் கைப்பையோடு வெளியே செல்லத் தயாராகிக் கொண்டிருந்த அவன் அம்மா,இவனைப் பார்த்து முறைத்தபடி, "உனக்கு எத்தன தர சொல்லிருக்கேன், அவங்க கூட விளையாடப் போறேன்னு அடம்பிடிக்கக் கூடாதுன்னு?" என்று திட்டியபடியே கண்களை மிரட்டலாய் உருட்டினாள்..அப்படி அவள் புருவத்தை இறுக்கி மிரட்டுகையில் அவளது நெற்றியில் புதிதாய் வந்து மறையும் சுருக்கங்களும் அகண்டு விரியும் கண்களும் ராகுலுக்கு பழக்கப்பட்டவை..

“ஏன் விளையாடக்கூடாது?“, என்று தன் உரிமைக்கான குரலாய் அவன் கேட்ட எதிர் கேள்விக்குக் கிடைத்தது, என்னவோ அம்மாவின் அடி மட்டும் தான்.. இதற்காகவே காத்திருந்த அவன் கண்களும் , கட்டியிருந்த கண்ணீரை இறுதியாக விடுதலை செய்தன..

அழுதபடியே “விளையாட போகணும்” என வாசல் கம்பியைக் கட்டிப் பிடித்து அழும் ராகுலைப் பார்த்து , கதவின் இரும்பு இதயத்திற்கு இன்னும் இரக்கம் வரவில்லை போலும்! அக்றிணை தானே அசைவற்று நின்றது.. அவன் அழுகைக்குச் செவி சாய்க்க வேண்டிய அவன் அம்மாவோ,

“உன்ன இங்கேயே விட்டுட்டு நான் வெளிய போனா,கதவ திறந்து போனாலும் போயிருவ! என் கூடவே கூட்டிட்டுப் போனா தான் சரிபட்டு வருவ!“ என்று அழுது கொண்டிருந்த சிறுவனை அவள் இழுத்துச் செல்ல, கதவைப் பிடித்திருந்த அவன் பிஞ்சு விரல்கள் , தன் பிடியை இழந்தாலும், அவன் பார்வை மட்டும் பருந்து போல், மைதானத்தையே சுற்றிப் பறந்தபடி இருந்தது...

மைதானத்தில் இறங்க வேண்டிய அவன் கால்களில் கண்ணுக்குத் தெரியாத விலங்கு பூட்டப்பட்டு, அவன் விருப்பத்துக்கு எதிராய் இப்போது அம்மாவின் ஸ்கூட்டியில் முன்னே நின்றபடி,விலங்குப் பூட்டிய கைதி போல் மைதானத்தைக் கடந்து செல்கிறான்... பரந்து விரிந்து கிடக்கும் மைதானத்தை வெறும் கண்களால் அவன் மேய, மைதானத்தின் குறுக்கே செல்லும் இவர்கள் வண்டியால் வழக்கம் போல் லார்ட்ஸ் மைதானத்தில் சில நிமிடம் ஆட்டம் தடைப்பட்டு, அவர்கள் கடந்ததும் மீண்டும் துவங்கியது..

“போல்டு.........” என்ற சப்தத்தைக் கேட்டு, மைதானத்தைக் கடந்து கொண்டிருக்கும் ராகுலின் தலை அனிச்சையாய்த் திரும்பிப் பார்த்தாலும் , அவனது வண்டி நிற்காமல் மைதானத்தைக் கடந்து செல்ல, அவனது பார்வை மட்டும், வண்டி மைதானத்தை முழுதும் கடக்கும் வரை அதை விட்டு விலகாமலேயே இருந்தது..

பொழுது சாய , குழந்தைக்கான எந்த ஒரு சிரிப்பும் ,சந்தோஷமும் முகத்தில் இல்லாமல் , கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் பறவையைப் போல் மீண்டும் தன் பூட்டிய வீட்டிற்கு ராகுல் அழைத்து வரப்பட்டான்....பறக்கத் துடிக்கும் பறவையின் சிறகைப் போல் அவன் கால்களும் வெளி உலகம் காண வேண்டி பூட்டிய கதவின் பின்னால் விடுதலைக்காக காத்திருக்கின்றன..

ஆனால் மைதானத்தில் மட்டைக்கும் பந்துக்குமான சண்டை இன்னும் தீர்ந்தபாடு இல்லை...மாலை நேரத்துச் சூரியன் கூட இன்னும் மறையாமல் இவர்களது விளையாட்டை வேடிக்கைப் பார்த்தபடி இருக்கிறான்... “அவுட்டு....” என்று பட்டன் இல்லாத சட்டையுடன் ஒரு சிறுவன் கத்துவதையும் , “ஏமாத்துறான், பேட்ல பால் படவே இல்ல...” என்ற சட்டை அணியாத இன்னொரு சிறுவன் சண்டை போடுவதையும் எப்போதும் போல் கதவோரத்தில் நின்றபடியே ராகுல் பார்த்துக் கொண்டு இருக்க, வீட்டின் கதவருகில் அழையா விருந்தாளியாய், மைதானத்தில் இருந்து யாரோ அடித்த பந்து வந்து விழுந்ததும், சூரியனைப் பார்த்த தாமரையாய் மலர்ந்தது ராகுலின் முகம். அவன் கண்கள் ஆசையில் ஒளிரின.. விழுந்த பந்தை கையில் எடுத்தபடி வாசல் கதவைத் திறக்க முயற்சித்த ராகுலை எச்சரித்தது அவன் அம்மாவின் குரல், “இன்னொரு தர அடி கொடுத்தா தான் அமைதியா இருப்ப.. அவங்க கூட விளையாட

போகக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல? உன்ன அப்பாட்ட சொன்னாதான் சரிபட்டு வருவ!.."

ராகுல் வாசல் கதவின் கம்பியைப் பிடித்தபடியே , "ஏன்ம்மா..?"

"அவங்கலாம் நம்ம வீட்டுலையும் , பக்கத்து வீட்டுலையும் வேலை பாக்குறவங்களோட பசங்க! அவங்க கூடலாம் நீ சரிசமமா பழகக்கூடாது. புரிஞ்சுதா?" என்று அதட்டும் குரலில் சொல்லியபடி, சிறுவனின் குழந்தை மனதில் அவள் விஷ வித்தை விதைத்தாலும், ஏதும் புரியாதவனாய் மறுபடியும் கேட்டான் "ஏன்?" என்று. கேள்விக் குறி போல் அவனது புருவங்கள் வளைந்தபடியே அம்மாவின் பதிலுக்காக காத்திருந்தன..

"திருப்பி திருப்பி அதையே கேட்காத..நம்மளமாதிரி அவங்க கிடையாது. நம்ம வேற அவங்க வேற.. அவங்களப் பாரு! தலைச் சீவாம சட்டை கூடப் போடாம தெருல விளையாடுறாங்க. அவங்க கூடலாம் நீ ஒண்ணா சேர்ந்து விளையாடக் கூடாது" என்ற அவளது பதிலில் மறைந்திருந்த 'வர்ணப்'பூச்சை புரிந்து கொள்ளும் வயது இல்லாததால் யோசனை ஏதுமின்றித் தான் அணிந்திருந்த விலை உயர்ந்த சட்டையை வெடுக்கென கழற்றி எறிந்தான்.

"அம்மா! இப்போ நானும் சட்டை போடல, அவங்க கூட விளையாடப் போறேன்!" என்று மழைநீர் போன்ற களங்கமில்லாத குரலில் ராகுல் பதில் சொல்ல, அந்தப் பதிலால் சமுதாயமும் அவன் பெற்றோரும் அவன் காலில் பூட்டியிருந்த அந்தஸ்த்து என்ற விலங்கு உடைந்து தெறித்து விழுந்தது.. விடுதலை பெற்ற கால்களுடன் மைதானத்தை நோக்கி ஓட்டம் பிடித்தான்...

அவன் “வேண்டாம்” என்று விட்டுச் சென்றது வெறும் மேலாடை மட்டும் அல்ல, சமுதாயம் பிறவியிலே அவனுக்கு அணிவித்திருந்த ஜாதி மற்றும் பணத்தின் அடையாளத்தை. அதைத் துறந்து வீட்டின் படி தாண்டும் அவனை இந்த முறை எந்த ஒரு பூட்டிய கதவும் தடுக்கவில்லை…

வீட்டின் படியைத் தாண்டி வெளிஉலகம் வந்தவனைத் தெருவின் மண்ணும், புழுதியும், பிறசமூகத்து நட்பும் அழுக்காக்கவில்லை. மாறாக இன்னும் அழகாக்கியது….

****